பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 15 வியாழக்கிழமை 29.12.2022 கதிர் 54

**இது ரகசியம் அல்ல!**

அரசியல்வாதிகளுக்கு இது போதாத காலம் போலும்.

மிக அண்மையில், நாடாளு மன்றத்தில் கிண்டல் கதை யொன்று பேசிய பிரதான எதிர்க் கட்சியின் எம்.பி. ஒருவர் நேற்று பெரும் சிக்கலில் மாட்டி இருக் கின்றார். ☞2

## மாகாணங்களின் அதிகாரங்கள் யாவும் திரும்பவும் கையளிக்கப்பட வேண்டும்!

### ஜனாதிபதியிடம் தாம் வலியுறுத்தினார் என அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



ஜனாதிபதியின் நிறைவேற்று அதி காரத்தினால் இல்லாது செய்யப்பட்ட மாகாணங்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் மீளவும் மாகாண சபை களிடம் கையளிக்கப்பட வேண்டும் என்ற விடயம் வலியுறுத்தப்பட்டுள்ள தாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், நடைமுறைச் சாத்திய மானவழிமுறையைஏற்றுகொண்டு, வெளிப்படைத் தன்மையுடன் செயற் படக் கூடிய தமிழ் தரப்புக்களுடன் இணைந்து, தமிழ் மக்களின் அரசி யல் அபிலாசை தொடர்பான விடயத் தில் செயற்படுவதற்குத் தாம் தயாராக இருக்கிறார் எனவும் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் ☞2



## யாழ். நகரில் சீனக் குழு வேட்டியுடன் பிரதிநிதி

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணக் கோட்டைக்கு இலங்கைக்கான சீன தூதரகத்தின் பிரதிநிதிகள் குழுவினர் விஜயம் செய்து பார்வையிட்டனர். ☞2

# இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தினால் தமிழருக்கும் இந்தியாவுக்கும் பேராபத்து!

### எச்சரிக்கின்றார் ஸ்ரீதரன் எம்.பி.

**கிளிநொச்சி, டிசம்பர் 29**

**இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் ஈழத் தமிழர் களுக்கும் அயல் நாடான இந்தியாவின் பாதுகாப்புக் கும் பெரும் ஆபத்தாக மாறி உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.** ☞2





## யாழில் சுதந்திர தின விழா பெப்.17 இல்; கலாச்சார மத்திய நிலையத்தில் நடக்கும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றுவார்

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலோடு தேசிய ரீதியிலான 75 ஆவது சுதந்திரதின கொண்டாட்டம் யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலை யத்திலும் இடம் பெற உள்ளதாக ஜனாதி பதியின் மேலதிக செயலாளர் இலட்சும ணன் இளங்கோவன் தெரிவித்தார்.

75 ஆவது சுதந்திர தின நிகழ்வு தொடர்பில் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் மூன்று முக்கியமான ☞2

## அரசு - தமிழர்கள் தரப்புப் பேச்சுக்கு வாழ்த்துக் கூறக் கூட சீனா மறுப்பு!

(நடராசா லோகதயாளன்)

நாம் இந்தியாவின் கலாச்சாரத்தை ஒத்தவர்கள் என்பதனால் அத்னை நாம் நாடி நிற்பது குறித்து சீனா அஞ்ச வேண் டிய தேவை கிடையாது என சீனத் துணைத் தூதுவரிடம் யாழ்ப்பாணப் பிர முகர் ஒருவர் எடுத்துரைத்தார்.

இந்திய - குறிப்பாக தமிழக - மக்க ளுக்கும்இலங்கைத்தமிழ்மக்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவைத் தாங் கள் புரிந்து கொள்கிறார்கள் என சீனத் தூதுவர் பதிலளித்தார். ☞10

## வியட்நாமில் மீட்கப்பட்டவர்களில் 152 அகதிகள் நாட்டுக்கு மீண்டனர்

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கனடாவுக்கு செல்ல முயற்சித்தபோது கப்பல் பழுதடைந்து வியட் நாம் கடல் எல்லையில் மீட்கப்பட்ட 303 ☞10

## செட்டிகுளத்தில் புதையல் தோண்டும் ஸ்கானர் கருவியுடன் இளைஞர் கைது



வவுனியா, செட்டிகுளம் பகுதி யில்புதையில்தோண்டபயன்படும் ஸ்கனார் கருவியுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட் டுள்ளார் என ☞10

## வவுனியாவில் சமத்துவக் கட்சியின் வன்னி தலைமையகம் திறந்து வைப்பு

சமத்துவக் கட்சியின் வன்னி தலைமை அலுவலகம் வவுனியா கந்தசுவாமி வீதியில் நேற்றுத் திறந்து வைக் கப்பட்டது.

அலுவலகத்தின் பெயர்ப் பலகையை கட்சியின் தவி சாளர் சுப்பையா மனோகரன் திறந்து ☞10





## மன்னாரில் ரஜமகா விகாரை சீன உதவியுடன் அமைகிறது

### பிரதித் தூதுவர் நேற்று அத்திவாரம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.29

மன்னாரில் அமையவுள்ள ரஜமகா விகாரையின் கட்டுமானத்திற்கான அடிக்கல்லை இலங்கைக்கான சீனப் பிரதித் தூதுவர் நேற்றைய ☞10

# இந்திய அரசு நிவாரணமாகத் தந்த அரிசி மூடைகள் வவுனியாவில் பதுக்கல்; பழுதடைந்த நிலையில் மீட்பு



இந்திய அரசாங்கத்தால் நிவாரணத்திற்காக வழங் கப்பட்ட ஒரு தொகுதி அரிசிப் பைகள் பாவனைக்கு உத வாத நிலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆசி குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மதுராநகர் கிரா மத்தின் பொது நோக்கு மண்டபத்தில் அரிசி மூடைகள் சில இருக்கின்றன என அப் பகுதி மக்கள் சிலர் தெரிவித்த கருத்துக்கு அமைவாக அந்த மண்டபத்தை அப் பகுதி மக்கள் சோதனை செய்த போது இந்திய அரசாங்கத் தின் இலச்சனையுடன் நிவாரணத்திற்காக வழங்கப் பட்ட அரிசி மூடைகள் ஒரு தொகுதி கண்டு பிடிக்கப்பட்டுள் ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்காத நிலையில் அவை பல மாதங்களாக பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை யால் புழு, வண்டு மற்றும் எறும்புகள் ☞10

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாதங்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் இளம் எம்.பியான (ஐம்பது வயதுக்கும் குறைவு என்பதால் இந்தப் பதம்) புத்திக பத்திரன ஒரு சர்ச்சையை நாடாளுமன்றத்தில் கிளப்பியிருந்தார்.

நாடாளுமன்றத்தின் ஜனாதிபதியின் அலுவலகப் பகுதிக்கு ஒரு புதிய கட்டில் வந்து இறங்கி இருப்பதாகவும், அது ஏன் என்றும் கொச்சைப்பட அவர் தாறுமாறாகக் கேள்வி எழுப்பி இருந்தார். கடும் விமர்சனங்களையும் முன் வைத்தார். கட்டிலின் நீள, அகலம், உயரம் பற்றி எல்லாம் அவர்பேசியமைபலஉள்ளார்த்தங்களை தந்து நிற்கத் தவறவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 74 வயது வயோதிபர். நாடாளுமன்ற நாள்களில் காலையில் தொடங்கி முன்னிரவு வரை நாடாளுமன்ற அலுவலகத்தில் இருந்து பணியாற்றினால், இடையில் ஓர் ஓய்வு தேவைப்படக்கூடும். அதனால் முன்னாயத்தமாக, ஓய்வுக்கான ஏற்பாடாக, ஒரு கட்டில் வந்திருக்கக் கூடும். அதை கொச்சைப்படுத்திய புத்திக்க பத்திரன இப்போது தாமே மோசமான சிக்கலில் மாட்டி இருக்கின்றார்.

ஜனாதிபதியின் ஆலோசகராக இருந்த முன்னாள் எம்.பி. கலாநிதி ஆசு மாரசிங்க கடந்த வாரத்தில் நாய் ஒன்றை ஒட்டி ஒரு சிக்கலில் மாட்டினார் என்பது தெரிந்ததே. அவரையும் நாயையும் வீடியோ படம் பிடித்தவர் அவருடன் சில காலம் கூடி வாழ்ந்த ஆதர்ஷ கரந்தன என்ற இளம் பெண்.

அந்தப் பெண்ணிடம் வீடியோவை பெற்று, விடயத்தை ஊடகங்களிடம் காட்டி, அம்பலப்படுத்தியவர் ஹிருணிகா பிரேமச்சந்திர. இது ஏற்கனவே தெரிந்த விடயம்.

அதே ஆதர்ஷ கரந்தன என்ற இளம் பெண்ணுக்கும் புத்திக்க பத்திரன எம்.பிக்கும் இடையிலான ஓர் ஒழியோ உரையாடல் தென்னிலங்கையில் வெளியாகி, சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி, சக்கை போடு போடுகிறது.

புத்திக்க பத்திரனவுக்கும் ஆதர்ஷ கரந்தனவுக்கும் இடையில் கொஞ்சம் கொச்சையாக நடந்த நீண்ட உரையாடல்தான் இந்த ஆடியோவில் உள்ளது.

ஹோட்டலில் தனி அறையில் காத்திருங்கள் என்பதில் தொடங்கி, சாப்பிடுவது, குடிப்பது பற்றி எல்லாம் இருவரும் சரளமாக - பச்சையாக - பேசுகிறார்கள்.

ஹிருணிகாவின் ஆள்தான் ஆதர்ஷ கரந்தன. அப்படி இருக்கையில், ஹிருணிகாவின் ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த புத்திக்க பத்திரனவே இவ்விடயத்தில் சிக்கலில் மாட்டியிருக்கின்றமை சிலருக்கு சில சந்தேகங்களைத் தந்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளேயே ஆளையாள் கால்வாரும் வேலை ஆரம்பமாகி விட்டமையையே இந்த ஒழியோ லீக் எடுத்துக்காட்டுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் இது 2019 இல் பேசப்பட்ட விடயம், பண்டிகைக் கொண்டாட்டங்களை ஒட்டி குறும்பாக பேசப்பட்ட ஒரு விவகாரத்தை தவிர அதில் சில்மிஷம் ஏதுமில்லை என்று புத்திக பத்திரண தரப்பில் விளக்கம், வியாக்கியானம் கூறப்படுகிறது.

எது, எப்படி என்றாலும், மன்மத விளையாட்டுக்களில் ஈடுபாடு காட்டும் அரசியல்வாதிகள், இனிக் கொஞ்சக் காலம் கவனமாக இருப்பது நல்லது.

***

வழமையாக, அப்பட்டமாகப் பேசி, கருத்துக்களை வெளியிட்டு, சர்ச்சையைக் கிளப்பி வருகின்றவர் ரெலோவின் வன்னி மாவட்ட எம்.பி. வினோ நோகராதலிங்கம்.

தமிழ் கூட்டமைப்பையே விபச்சார வீடு என்று ஒரு பொது நிகழ்வில் மோசமாக - பகிரங்கமாக - விமர்சித்தவர் அவர்.

நேற்றும் வவுனியாவில் அதே பாணியில், கடுமையான வார்த்தைப் பிரயோகங்களுடன், கருத்துக்களை ஒரு பொது நிகழ்வில் வெளியிட்டு இருக்கிறார் வினோ எம்.பி.

தமிழ் கட்சிகள், மக்கள் ஒன்றுபடாவிட்டால், இப்போதைய நிலையில், இப்போது இருக்கும் தலைவர்களால் தமிழினத்திற்கு எந்த நீதியும் கிட்டாது என்ற சாரப்பட வினோ பேசி பெரும் சலசலப்பை ஏற்படுத்தி இருக்கிறார். நேரமும் வாய்ப்பும் கிட்டினால் அது பற்றியும் பின்னர் பார்க்கலாம்.

- மின்னல் -

## மாகாணங்களின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க தலைமையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற - நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனான - கலந்துரையாடல் தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத்தில் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்தக் கலந்துரையாடலில் அமைச்சரவை உப குழுவின் பிரதிநிதி என்ற அடிப்படையிலும் அரசியல் கட்சியின் தலைவர் என்ற அடிப்படையிலும் இரட்டை வகிபாகத்தைத் தாம் கொண்டிருக்கிறார் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டகளஸ் தேவானந்தா, 13 ஆம் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்ட போது மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் கையளிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் தாம் முன்வைத்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர வேண்டும் என்று கடந்த 35 வருடங்களாக ஈ.பி.டி.பி. வலியுறுத்தி வருகின்ற வழிமுறையையே தற்போது ஏனைய தரப்புக்களும் வலியுறுத்தி வருகின்றமை தன்னுடைய அரசியல் பயணத்திற்கு கிடைத்த வெற்றி எனவும் தெரிவித்துள்ளார்.

வகிபாகத்தினை கொண்டிருப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டகளஸ் தேவானந்தா, 13 ஆம் திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்ட போது மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளவும் கையளிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர வேண்டும் என்று கடந்த 35 வருடங்களாக ஈ.பி.டி.பி. வலியுறுத்தி வருகின்ற வழிமுறையையே தற்போது ஏனைய தரப்புக்களும் வலியுறுத்தி வருகின்றமை தன்னுடைய அரசியல் பயணத்திற்கு கிடைத்த வெற்றி எனவும் தெரிவித்துள்ளார்.

## யாழ். நகரில் சீனக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை 4 மணியளவில் இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதர் ஹூ வெய், சீனத்துதரக அரசியல் விவகார அதிகாரி லியோ சொங் உள்ளிட்ட மூவர் குழுவினரே குறித்த விஜயத்தில் ஈடுபட்டனர்.

இந்த விஜயம் சுற்றுலா ரீதியானது என தெரிவிக்கப்படுகின்ற நிலையில் கோட்டை பொறுப்பான அலுவலர்களோ உத்தியோகஸ்தர்களோ பிரசன்னமாகி இருக்கவில்லை.

இதன்போது கோட்டை தொடர்பான விடயங்களை அங்கிருந்தவர்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

வந்திருந்த சீன தூதரகத்தின் அதிகாரி ஒருவர் தமிழர்களின் கலாசார உடையான பட்டு வேட்டியுடன் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தது அங்கிருப்பவர்களை கவர்ந்தது.

அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

## இலங்கையில் சீனாவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கண்டாவளை வட்டாரத்துக்குரிய வட்டாரக் கிளையின் புதிய நிர்வாக தெரிவு நேற்று மாலை புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

அமெரிகாவிற்கு உலகத்தில் சீனா - குறிப்பாக இலங்கையில் - அகலக்கால் பதிப்பது பிரச்சினையாகும். அதே போல் இலங்கையின் வடக்கு, கிழக்கு முனைகளில் சீனாவின் கால் பதிப்பானது இந்தியாவினுடைய பாதுகாப்புக்கும் பிரச்சினை.

இலங்கை இப்போது சீனாவின் ஆதிக்கத்திற்குக் கருவியாகவுள்ளது

கடந்த 2009 ஆம் ஆண்டுமுதல் 2022 ஆம் ஆண்டு செப்ரம்பர் வரையும் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் தமிழர்களுக்குஎதிராகவும்சிங்களத்துக்கு ஆதராகவும் சீனா இதுவரை காலமும் வாக்களித்தது வந்துள்ளது.

இலங்கையில்சீனாவின் ஆக்கிரமிப்பு தமிழர்களுக்கு மட்டுமல்ல அயல் நாடாகிய இந்தியாவின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

இப்போது எமக்கு மிக நெருக்கடியான ஒரு காலம். ஒரு புறத்தில் போதை வஸ்து தொடர்பான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றோம். மறுபுறத்தில் நாடுகளின்பிடிகளுக்குமுகம்கொடுக்கின்றோம். நாங்கள் எங்களுக்குள் இருப்பவர்களை ஒன்றிணைத்து வைத்திருப்பதில் நெருக்கடிகளைசந்தித்துஇருக்கின்றோம்.

இவையெல்லாம் எங்கள் முன்னால் சவால்களாக நிற்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக எமக்கு ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வு தேவை. தமிழர்களுக்கு ஒரு நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு தேவை எனில் அமெரிக்காவினுடைய பங்கும், இந்தியாவினுடைய பங்கும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் தலையீடும் தேவை.

இப்போது விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு பாதிக்கப்படுவதனால் எமது மக்கள் மீளவும் நெருக்கடிகளுக்குள் தள்ளப்படுகின்றார்கள். இவ்வாறான நிலையில் உதவி தேட வேண்டிய ஒரு நெருக்கடி தோற்றுவிக்கப்படும். இதனை சீனா சரியாக பயன்படுத்துகின்றது. இந்த சூழ் நிலைகளிலிருந்து விடுபட வேண்டுமாயின் நாங்கள் ஒரு பலமான சக்தியாக இருந்துதானச்க வேண்டும். - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்

இந்தக் கலந்துரையாடலில் கரைச்சி, பூநகரி பிரதேச சபைகளினுடைய தவிசாளர்கள்மற்றும்முன்னாள் வடக்குமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## யாழில் சுதந்திர தின ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக பெப்ரவரி நான்காம் திகதி கொழும்பில் பிரதான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதற்கு பின்னராக பெப்ரவரி 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு இருக்கின்ற கலாச்சார மத்திய நிலையத்தில்அதனுடையஒருமுழுமையானசெயல்பாட்டு நிகழ்வோடு சுதந்திரதின விழா ஏற்பாடுகளும்முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கான ஆரம்ப கலந்தரையாடல் நேற்று முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக கலாச்சார மத்திய நிலைத்தினுடைய இணைப்பு முகாமைத்துவ குழுவில்

(10ஆம் பக்கம் பார்க்க)






# வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி அரசியல் நடவடிக்கை!

## வாசுதேவவின் புதிய கூட்டணி திட்டமிடல்

இலங்கை மேலவை கூட்டணி தலைமையிலான புதிய அரசியல் கூட்டணி எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகளுடன் ஆரம்பக்கட்ட பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இலங்கை மேலவை கூட்டணியின் உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற பேச்சு தொடர்பில் வினவிய போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை தற்போது முன்னெடுத்துள்ளது.

2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. தேர்தல் என்பது நாட்டு மக்களின் உரிமை அதனைப் பாதுகாப்பது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விவகாரம் உயர்நீதிமன்றம் வரை சென்றுள்ளதால் தேர்தலை பிற்போட அரசாங்கம் அரசியல் சூழ்ச்சிகளை முன்னெடுக்காது என எதிர்பார்க்கிறோம். நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை உயர் நீதிமன்றம் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக உள்ளது.

இலங்கை மேலவை கூட்டணி தலைமையிலான புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் ஆரம்பக்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வமாக அறிவிப்பு எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும். எதிர்க் கட்சிகளுடன் ஆரம்பக்கட்ட பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம். தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம். பரந்துபட்ட அரசியல் கூட்டணியை நிச்சயம் ஸ்தாபிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 5 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் அவர் எந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளார்.



வரி வீதத்ததை அதிகரித்து பொருளாதாரரீதியில் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைப்பது நிச்சயமற்றது. – என்றார்.

# அடுத்த வருடம் 7 நிலக்கரி கப்பல்கள் இலங்கை வரும்!

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

ஜனவரி மாதம் 07 கப்பல்கள் ஊடாக நிலக்கரிகளை பெற்றுக்கொள்ள 30 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

முதலாவது நிலக்கரி கப்பல் அடுத்த மாதம் 05 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

வலுசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி தட்டுப்பாடு, நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைவதற்கு ஏற்பட்டுள்ள தாமதம் ஆகிய காரணங்களால் தற்போது இரண்டரை மணித்தியால மின் விநியோக தடை அமுல்படுத்தப்படுகிறது. எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி மின் விநியோக துண்டிப்பு இடம்பெறாது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் பணிகளுக்கான நிலக்கரி இம்மாதத்துடன் நிறைவு பெறும் என தொழிற்சங்கத்தினர் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது. ஜனவரி மாதம் 08 ஆம் திகதி வரை நிலக்கரி களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் மாத்திரம் 7 கப்பல்கள் ஊடாக நிலக்கரிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலாவது நிலக்கரி கப்பல் எதிர்வரும் மாதம் 05ஆம் திகதி நாட்டை வந்தடையும். இந்த




கப்பலில் தரையிறக்கப்படும் 60 ஆயிரம் மெற்றிக்தொன் நிலக்கரி நுரைச்சோலை அனல் மின்நிலையத்துக்கு அன்றைய தினமே அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாவது நிலக்கரி கப்பல் எதிர்வரும் ஜனவரி மாதம் 09 ஆம் திகதி, மூன்றாவது நிலக்கரி கப்பல் எதிர்வரும் 16 ஆம் திகதி நாட்டை வந்தடையும். ஜனவரி மாதம் 7 நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடையும். நிலக்கரி கப்பல்களுக்கான 30 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. மிகுதி 70 சதவீத கட்டணத்தை செலுத்த இலங்கை மின்சார சபை, இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளன.

அரசியல் விவகாரங்களில் முழுமையாக தடையிடும் ஓமல்பே சோபித தேரர் புத்தசாசனத்தை பாதுகாக்கும் விடயங்களில் தலையிடுவதில்லை. பாலி மற்றும் புத்தசாசன பல்கலைக்கழகத்தின் தற்போதைய நிலை தொடர்பில் அவர் இதுவரை அறியவில்லை என நினைக்கிறேன். – என்றார்.

# ஒரு மின் அலகிற்கான கட்டணத்தை 48 ரூபாவாக நிர்ணயிக்க உத்தேசம்!

மின்கட்டணத்தை 60 முதல் 65 சதவீதம் வரை திருத்தம் செய்யவும், ஒரு மின் அலகுக்கான கட்டணத்தை 48 ரூபாவாக நிர்ணயிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொஹான் செனவிரத்ன தெரிவித்தார்.

மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –இலங்கை மின்சார சபையின் பரிந்துரைக்கு அமைய கடந்த ஓகஸ்ட் மாதம் மின்கட்டணத்தை அதிகரிக்க இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதிவழங்கவில்லை. எமது பரிந்துரைக்கு அமைய மின்கட்டணத்தை திருத்தம் செய்திருந்தால் இன்று இரண்டரை மணித்தியாலங்கள் மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய தேவை ஏற்படாது.

மின் கட்டண திருத்தம் தொடர்பான 20 விடயங்கள் அடங்கிய யோசனையை மின்சாரத் துறை அமைச்சு அடுத்த மாதம் அமைச்சரவையில் முன்வைக்கும். கட்டண திருத்தத்துக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. மின்கட்டண திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சார சபையால் மாத்திரம் தனித்து செயற்பட முடியாது.

மின்கட்டணத்தை 60 முதல் 65 சதவீதம் வரை திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு மின் அலகிற்கு தற்போது 29.14 ரூபா அறவிடப்படுகிறது. தற்போதைய உற்பத்தி செலவுக்கு இந்த தொகை சாத்தியமற்றதாக உள்ளது. அடுத்த ஆண்டுக்கான உற்பத்தி செலவுகளை அடிப்படையாக கொண்டு ஒரு மின் அலகு உற்பத்திக்கு 48.42 ரூபா செலவாகும், ஆகவே ஒரு மின் அலகுக்கான கட்டணத்தை 48 ரூபாவாக நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# திரிபோஷாவை தடையின்றி வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து!

பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணி தாய்மார் மற்றும் நிறை குறைவான குழந்தைகளுக்குத் தேவையான திரிபோஷாவைத் தடையின்றி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் தென் ஆசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சுக்கிடையில் விசேட புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறித்த நிறுவனத்தால் ஒரு வருட காலத்துக்கான திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் வழங்கப்படும்.

இது அந்த நிறுவனத்தின் நிவாரணமாக வழங்கப்படுவதோடு, இதற்காக 1,850 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தென் ஆசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி ரொமேஷ் டேவிட், சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த மற்றும் திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

எடை குறைவான குழந்தைகளுக்காக திரிபோஷா வழங்கும் ஒரேயொரு நாடாக இலங்கை மாத்திரமே காணப்படுகிறது. கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்காக மாதமொன்றுக்கு சுமார் ஒரு லட்சம் திரிபோஷா பக்கெட்டுக்கள் விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# நாட்டில் குறைந்த வருமானம் கொண்ட விவசாய குடும்பங்களுக்கு கொடுப்பனவு

## விவசாய அமைச்சு அறிவிப்பு

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டத்தின் நிதியுதவியின் கீழ் 7 மாவட்டங்களில் குறைந்த வருமானம் கொண்ட நெல் விவசாய குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இந்த கொடுப்பனவு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, வவுனியா, மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மாதாந்தம் 41 ஆயிரத்து 500 ரூபா விற்கும் குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கு இந்த உதவி தொகையை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயத்துறை அமைச்சு, விவசாய அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றுடன் இடம்பெற்ற பேச்சுகளின் பிரதிபலனாக குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கு இந்த உதவித்தொகையை வழங்குமாறு சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க உதவித்திட்டம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த உதவித் தொகையை இரு கட்டங்களின் கீழ் ஜனவரி மாதத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஏ.எம்.எச்.எல். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஆசிய அபிவிருத்தி வங்கியால் நாட்டில் நெல் விவசாயத்தில் ஈடுபடும் 12 லட்சம் விவசாயிகளுக்கு 800 கோடி ரூபா நிதியுதவியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய 10,000 – 20,000 ரூபா நிதியை விவசாயிகளுக்கு வழங்கும் அதேவேளை, அதன் முதற்கட்டத்தின் கீழ் 400 கோடி ரூபாவை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்படுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 400 கோடி ரூபா ஜனவரியில் விவசாயிகளில் வங்கி கணக்குகளில் வைப்பிலிடப்படும் என்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் கீழ் ஒரு ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு 10 ஆயிரம் ரூபாவும் , 2 ஹெக்டேயர் நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த கொடுப்பனவுகள் எந்தவொரு விவசாயியிடமிருந்தும் மீளப் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது என விவசாயத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்த பெரும்போகத்தின் போது ஓர் ஏக்கருக்கும் குறைவான நிலப்பரப்பில் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு யூரியா உரத்தை இலவசமாக வழங்குவதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் , ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பால் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பறித்தவற்றை மீள அளியுங்கள்!

**ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரம் மூலம் இல்லாமல் செய்யப்பட்ட மாகாணங்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் மாகாண சபைகளிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தி இருக்கின்றார்.**

**மாகாண சபைகளின் அதிகாரங்கள் காலத்திற்குக் காலம் பதவியில் இருந்த ஜனாதிபதிகளினால் பறிக்கப்பட்டு வந்தமை கண்கூடு.**

**ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ போன்றோரின் கீழ் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா பணியாற்றியிருந்தார். எனினும் இப்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடம்தான் இப்படிப் பட்டவர்த்தனமாக 'எடுத்ததைத் திரும்பிக் கொடுங்கள்!' – என்று அவர் கூறக்கூடிய நிலைமை வந்திருக்கின்றது என்பது நல்ல அறிகுறியே.**

**அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டது. அதற்கு முன்னர் 1987 ஜூலையில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை – இந்தியா ஒப்பந்தமே இந்த 13 ஆவது திருத்தத்திற்கு அடித்தளமிட்டது.**

**அந்த ஒப்பந்தத்தை – அதன் விவரங்களை – தமது நாடாளுமன்றத்துக்கோ அமைச்சரவைக்கோ தெரியப்படுத்தாமலேயே, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அதில் கையெழுத்திட்டார்.**

**ஜனாதிபதி தமது நிறைவேற்ற அதிகாரங்களையே மாகாணங்களுக்கு பகிர்ந்து அளிக்கின்றார். எனவே அதற்கு – அந்த ஒப்பந்தத்திற்கு – நாடாளுமன்றத்தின் முற்கூட்டிய அங்கீகாரத்தை அவர் பெறத் தேவையில்லை என ஒரு வாதம் அச்சமயத்தில் முன்வைக்கப்பட்டது.**

**எனினும் சட்ட ரீதியாக மாகாண சபைகளை ஸ்தாபிப்பதற்காக 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அச்சமயத்தில் – 1988 இல் – 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட போது மாகாண சபைகளுக்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களில் கணிசமானவை ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன. விசேட அதிகாரங்கள் பல சட்டத்தில் – எழுத்தில் – அரசமைப்பில் – இருந்தமையுடன் முடக்கப்பட்டன. நடைமுறைக்கு வரவேயில்லை. குறிப்பாகக் காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கும் 13 ஆவது திருத்தம் அரசமைப்பில் சேர்க்கப்பட்ட போதிலும், அவை வெறுமனே எழுத்தில் இருந்தனவே தவிர, கடந்த 35 வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படவே இல்லை.**

**தவிரவும், மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட அதிகாரங்கள் பலவும் பின்னர் காலத்துக்குக் காலம் பிடுங்கப்பட்டன. ஒருபுறம் நிறைவேற்றதிகாரம் பலவற்றைப் பிடுங்கிக் கொண்டது. மறுபுறம் பல அதிகாரங்கள் சட்டங்களின் மூலம் பறிக்கப்பட்டன. வேறு பல விடயங்கள் சட்டங்கள் இல்லாமல் எதேச்சாதிகாரமாக பிடுங்கப்பட்டன. மாகாண சபைகளின் கீழான பாடசாலைகள் பல மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்படுவது இந்த வகையறாவை சேர்ந்ததுதான்.**

**இப்படிக் காலத்துக்குக் காலம் பல வழிகளிலும் – பல முனைகளிலும் – பிடுங்கப்பட்ட சகல அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு மீள வழங்கப்பட்டால்தான் அது ஓரளவேனும் உருப்படியான வடிவத்தைப் பெறும்.**

# கூட்டணியமைப்பது தொடர்பில் பல தரப்பினருடனும் பேச்சுகள்!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு




ஐக்கிய மக்கள் சக்தி எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு தயாராகவுள்ளது. கூட்டணியாகத் தேர்தல்களில் போட்டியிடுகின்றமை தொடர்பில் பல தரப்பினருடனும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தேர்தல் மீது கொண்டுள்ள அச்சத்தின் காரணமாகவே அதனைப் பிற்போடுவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

எனினும் நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்குத் தயாராக இருக்கின்றோம். எனவே பல்வேறு கலந்துரையாடல்களின் போது தேர்தல் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்ததைப் போன்று உரிய நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான கூட்டணியமைப்பது தொடர்பில் பல்வேறு கட்சிகளுடனும் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

ஐக்கிய மக்கள் கூட்டணியாகவே நாம் தேர்தலில் போட்டியிடுவோம். மக்களின் நிலைப்பாட்டை தேர்தலின் மூலம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். எனவே, தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் முயற்சித்தால் மக்களை அதற்கு எதிராக ஒன்று திரட்டுவோம். வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திடம் எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியும் இழுபறி நிலையிலுள்ளது. வரிகளை அதிகரிப்பதைத் தவிர, அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை. மின்கட்டண அதிகரிப்பு, எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாக அவற்றின் பாவனையை மக்கள் குறைத்துக் கொண்டுள்ளனர். வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. தேர்தலை காலம் தாழ்த்தி நாட்டை அராஜக நிலைமைக்குக் கொண்டு செல்வதை விட, மக்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு அவர்களுக்கு இடமளிக்க வேண்டும். – என்றார்.

# விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாக 30, 31 பிரகடனம்!



இலங்கையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன டிசெம்பர் 30 மற்றும் 31 ஆம் திகதிகளை விசேட டெங்கு கட்டுப்பாட்டு தினங்களாக அறிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி வரை இலங்கை முழுவதும் மொத்தம் 75 ஆயிரம் 434 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும், இது 2021 இல் பதிவான எண்ணிக்கையை விட இரு மடங்கு என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நிலைமை தொடர்ந்து அதிகரித்து வருவதால், ஜனவரியில் நாடு முழுவதும் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகும் அபாயத்தை இலங்கை எதிர்கொள்வதாக அமைச்சு கூறியுள்ளது.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 30 மற்றும் 31 ஆம் திகதிகளில், பொதுமக்கள் தங்கள் வீடுகளிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் சுத்தம்செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் இந்த அறிவிப்பு பணிபுரியும் இடங்கள் மற்றும் பொது இடங்களுக்கும் பொருந்தும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தடைசெய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து மருந்துகளை பெறுவதற்கு சுகாதார அமைச்சர் கெஹலிய முயற்சி!

## முன்னிலை சோசலிச கட்சி குற்றச்சாட்டு

இலங்கையின் அரச மருந்தாக்கற் பொருள்கள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் 2019 இல் தடை செய்யப்பட்ட இந்திய நிறுவனத்திடமிருந்து சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மருந்துகளை கொள்வனவு செய்ய முயல்கின்றார் என முன்னிலை சோசலிச கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

அமைச்சர் அரச மருந்தாக்கற் பொருள்கள் உற்பத்தி கூட்டுத்தாபனம் தொடர்பாகத் தெரிவித்த தகவல் உண்மையில்லை. 2019 இல் அரச மருந்தாக்கற் பொருள்கள் உற்பத்தி கூட்டுத்தாபனம் இந்த இந்திய நிறுவனத்தைத் தடை செய்துள்ளதுடன் அந்த நிறுவனத்திடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ள முன்னிலை சோசலிச கட்சி, தடை செய்யப்பட்ட அல்லது தரமான மருந்துகளை விநியோகிக்காத நிறுவனத்திடமிருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்ய முயல்கின்றார் எனவும் தெரிவித்துள்ளது.

அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கும்போது சில விடயங்களை அமைச்சர் மறைத்துள்ளார். அவர் அமைச்சரவையைத் தவறாக வழிநடத்தியுள்ளார் எனவும் முன்னிலை சோசலிச கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இதேவேளை சமீபத்தில் சுகாதார அமைச்சர் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்துக்கான செலவுகளை இந்திய நிறுவனமே பொறுப்பேற்றது எனவும் முன்னிலை சோசலிச கட்சி தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் டிசெம்பர் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை இந்தியாவின் மருந்து உற்பத்தி நிறுவனத்தை பார்வையிடுவதற்காக இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டார். இந்த விஜயத்துக்கான செலவுகளை குறிப்பிட்ட நிறுவனமே பொறுப்பேற்றது எனவும் முன்னிலை சோசலிச கட்சி தெரிவித்துள்ளது.

அமைச்சர் இந்த விஜயத்துக்கு அரசபணத்தை செலவிடவில்லை. தனியார் பணத்தை செலவிட்டார் என டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார். இதுவே பிரச்சினை. அவர் இந்தியாவிற்கு அரச செலவில் விஜயம் மேற்கொள்ளவில்லை, சென்னையில் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்துள்ளார். ஒரு நாளைக்கு ஹோட்டல் செலவு 400 டொலர் என முன்னிலை சோசலிச கட்சி தெரிவித்துள்ளது.

ஹோட்டலில் தங்கியிருப்பதற்கான கட்டணம் மட்டுமே இது. ஏனைய செலவுகள் தொடர்பாக எங்களுக்குத் தெரியாது, விமான கட்டணங்கள் உட்பட ஏனைய செலவு களுக்காக குறிப்பிட்ட நிறுவனம் எவ்வளவு நிதியை ஒதுக்கியது என்பதும் எங்களுக்குத் தெரியாது எனவும் முன்னிலை சோசலிச கட்சி தெரிவித்துள்ளது.

# யாழ்.பல்கலை மாணவர்கள் திருவெம்பாவை பாராயணம்!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் வழிகாட்டலில் மூன்றாவது வருடமாகவும் திருவெம்பாவை பாராயணம் நேற்று (புதன்கிழமை) திருவெம்பாவை விரதத்தின் முதலாம் நாளில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரா ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான திருவெம்பாவை பாராயணம் இராமநாதன் வீதியூடாக கலட்டி சந்தியை அடைந்து பாலசிங்கம் விடுதி ஊடாக தபால் பெட்டி சந்தி – பரமேஸ்வரா சந்தியை அடைந்து மீண்டும் பரமேஸ்வரா முன்றிலில் பாராயணம் முடிவுற்றது.

இதன்பொழுது மேற்படி பகுதிகளில் உள்ள ஆலயங்களையும் தரிசித்த வண்ணம் பாராயணம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக பத்து நாள்களும் மாணவர்கள் பாராயணம் முன்னெடுக்கப்பட்டு இறுதி நாள் மாணிக்கவாசகர் எழுந்தருளி திருவெம்பாவை முற்றுபெறவுள்ளது. எதிர்வரும் ஜனவரி ஐந்தாம் திகதி திருவெம்பாவையை முன்னிட்டு மார்கழி பெருவிழாவும் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 39,200 ஓடுகள் நிராகரிப்பு; 21 லட்சம் ரூபா நஷ்டமாம்!

மட்டாண்டக் கூட்டுத்தாபனத்தின் உஸ்வெள தொழிற்சாலைகளில் இருந்து சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்ட 39 ஆயிரத்து 200 ஓடுகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நிராகரிக்கப்பட்ட ஓடுகளை எடுத்துச் செல்ல, சபைக்கு 21 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

மாநகராட்சிக்கு சொந்தமான ஒன்பது தொழிற்சாலைகளில் ஏழு தொழிற்சாலைகளில் நிலம் மற்றும் கட்டடங்களின் உரிமையை உறுதி செய்வதற்கான உரிமை பத்திரங்களோ, சட்டபூர்வ ஆவணங்களோ இல்லை என்றும் அறிக்கை கூறுகிறது.

மட்டாண்டக் கூட்டுத்தாபனத்தின் நிலம் மற்றும் கிட்டத்தட்ட நான்கு கோடி மதிப்புள்ள கட்டடங்களுக்கு நிலையான சொத்து பதிவேடு பராமரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நிலையான சொத்துக்கள் கணக்கெடுக்கப்படவில்லை மற்றும் கணக்கெடுப்பு அறிக்கைகள் கணக்காய்வு அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அறிக்கை தெரிவிக்கின்றது.

## சிறைத் தண்டனை வழங்கலுக்குப் பதிலாக சிறிய குற்றங்களுக்கு வீட்டு காவல் திட்டம்!

சிறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்படும் சந்தேக நபர்களை அதற்கு பதிலாக வீட்டுக் காவலில் வைத்திருப்பது தொடர்பான சட்டங்களைக் கொண்டு வர நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான சந்தேகநபர்கள் சிறையில் பல்வேறு நபர்களுடன் பழகுவதுடன் கடுமையான குற்றவாளிகளாக சமூகமயமாகி விடுகின்றனர் என தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இதனை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்புடைய சட்டங்களைக் கொண்டு வந்த பிறகு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் அத்தகைய சந்தேக நபர்களை, மூன்று அல்லது நான்கு மாதங்கள் அல்லது அதற்கும் மேலாக வீட்டுக் காவலில் வைக்க நீதிபதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியும் எனக் கூறினார். இவை தொடர்பான சட்டங்களைக் கொண்டு வருவதற்கு என சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் தொடர்புடைய நிபுணர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் உட்பட சிறிய குற்றங்களில் ஈடுபடுபவர்களை முதல் தடவையாக வீட்டுக் காவலில் வைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

## கொழும்பில் இன்று முதல் மலிவான விலையில் முட்டை!

கொழும்பு மற்றும் கம்பஹாவில் இன்று (வியாழக்கிழமை) முதல் முட்டை 55 ரூபாவுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

முட்டை விலையை குறித்து விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பல முட்டை உற்பத்தியாளர் சங்கங்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது ஒரு முட்டையை 55 ரூபாவுக்கு விற்க அவர்கள் ஒப்புக்கொண்ட நிலையில் இன்று கொழும்பு மற்றும் கம்பஹாவில் முட்டை விற்பனை இடம்பெறவுள்ளது.

## வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மோசடி! சி.ஐ.டி. விசாரணை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் களுத்துறை மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் நிதி மோசடி தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்த மோசடி தொடர்பாக நிறுவனமட்டத்திலும்விசாரணை நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் பொறியியலாளர் கே.ஏ.ஜனக இதனைத் தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக உடனடியாக அறிக்கை ஒன்றை தமக்கு வழங்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவித்திருந்தார்.

இது தொடர்பான அறிக்கையை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் வழங்கியதையடுத்து, அவரின் பணிப்புரைக்கு அமைய விசாரணை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# யானை, மொட்டு மற்றும் தொலைபேசியுடன் என்றும் கூட்டணி அமைக்கப் போவதில்லை!



## ஜயந்த சமரவீர திட்டவட்டம்

யானை, மொட்டு மற்றும் தொலைபேசியுடன் கூட்டணி அமைக்க போவதில்லை. ஏனைய அரசியல் தரப்பினருடன் கூட்டணியமைக்க ஆரம்பக்கட்ட பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிச கட்சி காரியாலயத்தில் இலங்கை மேலவை கூட்டணியின் உறுப்பினர்களுக்கு இடையிலான பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கூட்டணியாகப் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்களாணை கிடையாது. ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் நல்ல நிலைப்பாடு கிடையாது.

யானை, மொட்டு மற்றும் தொலைபேசியுடன் கூட்டணியமைக்கப் போவதில்லை. ஏனைய அரசியல் தரப்பினருடன் கூட்டணியமைக்க ஆரம்பக்கட்ட பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தீர்மானமிக்கதாக அமையும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை. பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கத்தின் தீர்மானங்கள் காணப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு தகுந்த பாடம் கற்பிப்பார்கள். – என்றார்.

# எழுத்தாளர் மதிவதனியின் இரு நூல்களின் அறிமுக நிகழ்வு









திருகோணமலை, டிசெ. 29

மகுடம் கலை இலக்கிய வட்டம்,அன்பின்பாதை சமூகத்தின் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றம் இணைந்து நடாத்தும் எழுத்தாளர் மதிவதனியின் (சுவிஸ்) காட்சிப் பிழைகள் எனும் கவிதைநூல் மற்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தீர்வு எனும் குழந்தை உளவியல் ஆகிய இரு நூல்களின் அறிமுக நிகழ்வானது திருகோணமலை நகராட்சிமன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் 30.12.2022 மாலை 3.45 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக ஓழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஜனாப் ஏ.சீ.எம்.முஸ்இல் அவர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக எழுத்தாளர் ராணி சீதரன் மற்றும் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் கலந்து சிறந்நிப்பதோடு நிகழ்வினை முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் திரு நா.புவனேந்திரன் தலைமை தாங்கி நடாத்த எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக தீபகாந்தனின் வரவேற்புடனும் மகுடம் திரு மைக்கேல் கொலினின் நூலாசிரியரின் அறிமுகமும் இடம்பெறும். இந்நூலான் முதற் பிரதியை திருகோணமலை ஆச்சி சுவையூற்றூ அறுசுவை உணவகத்தின் உரிமையாளர் ரங்கா சாதுர்யன் பெற்றுக் கொள்கிறார்.

இந்நூலின் நயவுரைகளை கவிஞர் க. யோகானந்தம் மற்றும் உளவளதுணையளர் பிரம்மியா சண்முகராஜா நிகழ்த்த வுள்ளனர். திருதி றொசில்டா அன்டோ (அன்பின் பாதை) இந்நிகழ்வை ஒருங்கிணைந்து செயற்படுத்த செல்வி அபிநயா ரகுராம் தொகுத்து வழங்குகின்றார். நிகழ்விற்கு அனைத்து கலை இலக்கிய ஆர்வலர்களையும் ஏற்பாட்டாளர்கள் வரவேற்கின்றார்கள்.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# ரஷ்யாவுடன் அமைதிக் கொள்கையைச் செயல்படுத்த இந்தியாவின் உதவியை நாடுகிறார் உக்ரைன் அதிபர்


இந்திய – உக்ரைன் தலைவர்கள்

உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, திங்கள்கிழமை பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ரஷ்யாவுடனான அமைதிக் கொள்கையைச் செயல்படுத்த இந்தியாவின் உதவியை நாடினார்.

பிரதமர் மோடியுடன் நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வெற்றிகரமான ஜி20 தலைவர் பதவிக்கு வாழ்த்து தெரிவித்தேன். இந்த மேடையில்தான் நான் அமைதிச் சூத்திரத்தை அறிவித்தேன். இப்போது அதைச் செயல்படுத்துவதில் இந்தியாவின் பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஐ.நா.வில் மனிதாபிமான உதவி மற்றும் ஆதரவிற்கும் நன்றி தெரிவித்தேன். – என்று உக்ரைன் ஜனாதிபதி ட்வீட் செய்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் இனி கெய்வ் (உக்ரைன் தலைநகர்) பேச்சுவார்த்தை நடத்த மாட்டாது என்று ஜெலென்ஸ்கி அக்டோபரில் கூறினார்.

உக்ரைனின் ரஷ்ய ஆக்கிரமிப்புப் பகுதிகளான லுஹான்ஸ்க், டொனெட்ஸ்க், சபோரிஜியா மற்றும் கெர்சன் ஆகிய நான்கு பகுதிகளில் நடந்த வாக்கெடுப்புக்கு பதிலளித்த ஜெலென்ஸ்கி, உக்ரேனிய பிரதேசங்களை சட்டவிரோதமாக இணைக்க முயற்சிக்கும் அனைத்து ஆக்கிரமிப்பாளர்களின் முடிவுகளும் சட்ட வலுவற்றவை என்பதுடன் அவை யதார்த்தத்தை மாற்றாது என்றும் குறிப்பிட்டார்.

அத்தகைய நிலைமைகளின் கீழ், ரஷ்ய கூட்டமைப்பின் தற்போதைய தலைவருடன் உக்ரைன் எந்த பேச்சுவார்த்தையும் நடத்தாது என்று ஜெலென்ஸ்கி வலியுறுத்தினார். மேலும் எங்கள் அரசு எப்போதும் பேச்சுவார்த்தை மூலம் அமைதியான தீர்வுக்கு உறுதியளித்துள்ளது என்று ஜெலென்ஸ்கி அறிவிப்பு தெரிவித்துள்ளது.

இருப்பினும், ரஷ்யா பேச்சுவார்த்தைக்கு நிற்கவில்லை. அதற்கு பதிலாக ஒரு இறுதி எச்சரிக்கையை முன்வைத்தது. வேண்டுமென்றே இந்தச் செயல்முறையை குறைமதிப்பிற்கு உட்படுத்தியது. ஐ.நா. பொதுச் சபையின் அமர்வில் எனது உரையின் போது, அமைதிக்கான எங்கள் தெளிவான சூத்திரத்தை நான் கோடிட்டுக் காட்டினேன். அதை அடைய எங்கள் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம். – என்று உக்ரைன் ஜனாதிபதி மேலும் கூறினார்.

முன்னதாக திங்களன்று, உக்ரைன் ரஷ்யாவை ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து அகற்ற வேண்டும் என்று அழைப்பு விடுத்தது. அங்கு மொஸ்கோ (ரஷ்யா) பாதுகாப்பு கவுன்ஸிலின் நிரந்தர உறுப்பினராக எந்தத் தீர்மானத்தையும் வீட்டோ செய்ய முடியும்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் நிரந்தர உறுப்பினர் என்ற அந்தஸ்தை ரஷ்ய கூட்டமைப்பிடமிருந்து பறிக்க


பத்திரிகையாளர் கிறிஸ்டோ குரோசெவ்

வேண்டும் மற்றும் ஐ.நா.வில் இருந்து ஒட்டுமொத்தமாக விலக்க வேண்டும் என ஐ.நா.வின் உறுப்பு நாடுகளை உக்ரைன் கேட்டுக்கொள்கிறது.. ” – என்று வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“1991ல் சோவியத் யூனியன் உடைந்ததில் இருந்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சோவியத் ஒன்றியத்தின் இடத்தை ரஷ்யா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளது.” – அந்த அறிக்கை தெரிவித்தது.

இதற்கிடையில், ரஷ்ய எல்லைக்குள் ஆழமான சரடோவ் ஒப்லாஸ்ட்டில் உள்ள இராணுவ விமான நிலையத்தை நெருங்கியபோது, உக்ரேனிய ஆளில்லா விமானம் வான் பாதுகாப்புப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் திங்களன்று மூன்று ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டனர் எனப் பாதுகாப்பு அமைச்சகத்தை மேற்கோள் காட்டி ரஷ்ய அரசு செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

வோல்கா நதியில் அமைந்துள்ள மாஸ்கோவிற்கு தென்கிழக்கே சுமார் 500 மைல்கள் (800 கிலோமீற்றர்களுக்கு மேல்) மேற்கு துறைமுக நகரமான ஏங்கல்ஸில் இந்த சம்பவம் நடந்தது. இந்த மாதம், ஏங்கெல்ஸ் – 2 இராணுவ விமானநிலையம், ஒரு மூலோபாய குண்டுவீச்சு விமானத் தளம் அமைந்துள்ள நகரம் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் முயற்சி இதுவாகும் என்று சி.என்.என். தெரிவித்துள்ளது. இந்த மாதத் தொடக்கத்தில், சி.சி.ரி.வி. காட்சிகள் எங்கெல்ஸில் வானத்தில் ஒரு வெடிப்பு ஒளிர்வதைக் காட்டுகின்றன. அந்த நேரத்தில், கவர்னர் புசார்ஜின் குடிமக்களின் எந்தவிதமான சிவில் உள்கட்டமைப்பும் சேதமடையவில்லை என்றும், இராணுவ வசதிகளில் நடந்த சம்பவங்கள் பற்றிய தகவல்கள் சட்ட அமலாக்க முகமைகளால் சரிபார்க்கப்படுகின்றன என்றும் உறுதியளித்தார்.

அதிகாலையில் எங்கெல்ஸில் ஒரு பெரிய இடி மற்றும் வெடிப்பு பற்றிய வார்த்தை சமூக வலைப்பின்னல்களிலும் ஊடகங்களிலும் பரவி வருவதை அவர் ஒப்புக்கொண்டார். ஏங்கெல்ஸ் – 2 விமானநிலையம் டிசம்பர் தொடக்கத்தில் சிசிடிவி காட்சிகள் பதிவான இடத்திலிருந்து கிட்டத்தட்ட 6 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

இதற்கிடையில், புலனாய்வுப் பத்திரிகையாளர் கிறிஸ்டோ குரோசெவ் ரஷ்யாவின் தேடப்படுவோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று ரஷ்ய உள்துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்தக் கட்டுரை என்று குறிப்பிடாமல், பல்கேரியரான க்ரோசெவ், குற்றவியல் சட்டத்தின் கீழ் ஒரு கட்டுரை தொடர்பில் தேடப்படுகிறார் என்று உள்துறை அமைச்சகத்தின் இணையதளம் கூறுகிறது, என சி.என்.என். செய்தி வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவின் கண்காணிப்புக் குழுவான நூாம் – Info படி, ரஷ்ய இராணுவத்தைப் பற்றிய 'போலிச் செய்திகளை' பரப்புவதில் ஒரு கிரிமினல் வழக்கு குரோசெவ் மீது திறக்கப்பட்டுள்ளது. பெல்லிங்கேட்டின் இணையதளத்தின்படி, பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், வேற்று நாட்டு இரகசிய நடவடிக்கைகள் மற்றும் தகவல்களை ஆயுதமாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் புலனாய்வுக் குழுவான Bellingcat இன் முன்னணி ரஷ்ய ஆய்வாளர் குரோசெவ் ஆவார். (ANI)

(மூலம்:ஏ.என்.ஐ.)

# இந்தியாவில் ஜனவரி மாத நடுப் பகுதியில் கொரோனாத் தொற்று அதிகரிக்கக் கூடும்

## சுகாதார அமைச்சக அறிக்கையில் தெரிவிப்பு

புதுடெல்லி,டிச.28

சமீப வாரங்களாக சீனாவில் தினசரி கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது. இதன்படி, டிசம்பர் முதலாம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையிலான நாள்களில் சீனாவில் 24 கோடியே 80 லட்சம் பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு உள்ளது என்று தகவல் கசிந்தது. இது சீன மக்கள் தொகையில் 17.65 சதவீதம் ஆகும்.

சீனாவில் அதிகரித்து வரும் தொற்று எண்ணிக்கையை முன்னிட்டு, ஜப்பான், இந்தியா மற்றும் மலேசியா உள்ளிட்ட நாடுகள் சீன பயணிகளிடம் புதிய கொரோனா விதிகளைக் கடைப்பிடிப்பது என்ற அறிவிப்பை வெளியிட்டன. அமெரிக்காவும் இதுபற்றி பரிசீலனை செய்ய முடிவு செய்துள்ளது.

இந்தச் சூழலில், இந்தியாவில் உள்ள விமான நிலையங்களில் பயணிகளிடம் மேற்கொண்டு வரும் பரவலான பரிசோதனையில், கடந்த டிசம்பர் 24 முதல் 26 வரையிலான 3 நாள்களில் சர்வதேச பயணிகள் 39 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டு உள்ளது.

அவர்கள் அனைவரின் தொற்று மரபணு தொடர் மாதிரி முழு அளவில் மருத்துவ பரிசோதனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டு உள்ளது.

அமெரிக்கா, சீனா, ஜப்பான், பிரேசில், கொரியா உள்ளிட்ட சில நாடுகளில் கொரோனா பாதிப்பு அதி






கரித்த நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்தியா, கொரோனா கால தடுப்பு ஒத்திகையில் ஈடுபட்டு உள்ளது.

இதற்காக பல்வேறு மாநில மருத்துவமனைகளில் நேற்று முதல் சோதனை முயற்சி தொடங்கி தொடர்ந்து வருகிறது. டெல்லி சப்தர்ஜங் மருத்துவமனையில் மத்திய சுகாதார மந்திரி மாண்டவியா நேற்று நேரிடையாக சென்று ஒத்திகை முயற்சிகளைப் பார்வையிட்டார்.

இந்தியாவில், அடுத்த 40 நாட்களுக்கு கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அதிகரிக்க கூடும். இது ஜனவரி மத்தியில் அதிக பரவலாக மாற கூடும் என மத்திய சுகாதார அமைச்சக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்து உள்ளன.

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கொரோனாப் பாதிப்பு உயர்வின் பகுப்பாய்வு அடிப்படையில் இந்த ஆய்வு முடிவு தெரிவிக்கப்பட்டு உள்ளது. எனினும், இந்த முறை கொரோனா அலை ஏற்பட்டாலும் அதன் பாதிப்பின் கடுமை குறைவாக இருக்கும்.

இதேபோன்று உயிரிழப்பு மற்றும் மருத்துவமனையில் சேர்த்தல் ஆகியவையும் மிக குறைவாக காணப்படும் என்றும் சுகாதார அமைச்சக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ‘நாளை நமதே’ - எம்.ஜி.ஆர்.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 226**

நம்பிக்கைதான் யாவற்றிற்கும் ஆதாரம். அது தன்னம்பிக்கை மட்டும் அல்ல குறிப்பறிந்து மற்றவரையும் நம்ப வேண்டும். கண்ணதாசனின் பின்வரும் உவமானத்தை எனது முந்தைய தொடர் ஒன்றிலும் பதிவிட்டிருந்தேன்.

“சீதை பத்தினி என்ற நம்பிக்கையில் தான் ராமன் தைரியமாக இருந்தான். ராமன் வருவான் என்ற நம்பிக்கையில் தான் சீதை உயிரோடு இருந்தாள். ராமன் மீது நம்பிக்கை வைத்தே விபீணன் அவனுடன் சேர்ந்தான். இராவணன் மீது நம்பிக்கை வைத்தே கும்பகர்ணன் அவனோடு இருந்தான். நம்பினால் கை கொடுப்பது நம்பிக்கை. விழுந்த பின் எழுவதற்கு உன் கைகள்தான் உதவுகின்றன என்றால், அந்தக் கைகள் ஆண்டவனுடைய கைகள் என்று அர்த்தம். அங்கு போனால் அது கிடைக்காது, இங்கு போனால் இது கிடைக்காது என்று சந்தேகப்பட்டுக் கொண்டே இருந்தால் நீ எங்கேயும் போக மாட்டாய். எதிலும் முன்னேற மாட்டாய். இருந்த இடத்திலிருந்தே சாவாய்”

நாட்டின் தற்சமய பொருளாதார சூழ்நிலைகள் ஆண்டவன் தந்திருக்கும் கைகள். ஆகவே, மற்றவரின் கரங்களைப் பற்றிய சந்தேகங்களையும், சஞ்சலங்களையும், அவற்றுக்கு ஆணிவேரான சுயநலங்களையும் விட்டு, தமிழ்ப் பரப்புகள் ஒன்றை ஒன்று நம்பி, விசுவாசம் ஆக எல்லா விரல்களையும் இணைத்து, காலம் தந்தவற்றில் தமிழ் மக்களின் எதிர்காலத்தை முன்வைத்து, யதார்த்தமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

‘தர்மம் தந்த கை தர்மம் கண்டதா?’ என முன்னைய பதிவில் குறித்து இருந்தேன்.



வாசக நண்பர் கிருபாகரன், தமிழ் மக்கள் முன்னேறுவதற்கான வழி இதுதான் என எம்.ஜி.ஆரின் ‘நாளை நமதே – அன்பு மலர்களே’ என்ற பாடலைக் குறித்து அனுப்பி இருந்தார். ஆக்கத்திற்கு வலு சேர்ப்பதால் பதிவிடுகிறேன்.

கிருபாகரன் விடுதலையை யாசித்து வருடா வருடம் ஐ.நாவின் படிகளில் ஏறி இறங்குபவர். விடுதலைக்காக எனவும், வருடா வருடம் யாத்திரையாக வந்து போக போபவர்களையும், அரசியல் நிலைகள் போகும் பாதைகள் பற்றியும் அங்கலாய்க்கும் போது, இவற்றில் ஆழ்ந்து தியானம் செய்பவர். அவரைப்போல் விடுதலை விரும்பிகள், நல்லது நடக்க வேண்டும் என்று பிரார்த்திப்பவர்கள் தமிழ் ஊடகங்களிலும் இருக்கிறார்கள்.



“நாளை நமதே, இந்த நாளும் நமதே, தர்மம் உலகில் இருக்கும் வரையில் நாளை நமதே” – அந்த வரிகளை உற்று நோக்குங்கள். தர்மம் இருக்கும் வரையில் எனச்சொல்கிறது. இரக்கம், அன்பு, கருணை, தர்மம் என்பவற்றைக் காட்டிய பௌத்த மதம், கடவுள் ஒருவரை காட்டவில்லை. ஆனால் கடவுள் என்பவரை வணங்கும் இந்து மதம் அவற்றை விடவில்லை. அறத்தையும் காட்டியது. தங்கள் அவலங்களில் தமிழ் மக்கள் தேடிய, பாடிய அறம்தான் தர்மத்துக்கான காலத்தையும் தந்துள்ளது.

நல்ல மனைவியின் மேல் சந்தேகப்பட்டு வாழ்க்கையை அழித்துக் கொண்ட கணவர்கள் போல, தமிழ் மக்கள் ஆகியுள்ளார்களா, அல்லது மோசமான மனைவியையே முழுக்க நம்பி வாழ்ந்து முடித்தவர்கள் போல, சம்பந்தன் மேலும் அந்த நம்பிக்கையில் வாழ்ந்து முடித்து விட அழைத்துப் போகிறாரா என்பது பொங்கல் வர புரியலாம். எதுவோ அந்த தர்மம் எப்படி வரும்?

“தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஒரு வழி நின்று நேர்வழி சென்றால் நாளை நமதே!”

“மூன்று தமிழும் ஓர் இடம் நின்று சிந்துகள் பாட வேண்டும், அந்த நினைவுகள் என்றும் மாறாதே!”

“நாடும் வீடும் உங்களை நம்பி, நீங்கள் தான் அண்ணன் தம்பி!”

– இவற்றை உணர்ந்து தமிழ் மக்களிடையே உள்ள பரப்புகள் எல்லாம் ஒற்றுமையை முன்வைத்து, ஒன்றாக உருவாகி, வளத்தைத் தேட வேண்டும். ஆணவங்களும் தலைக்னங்களும் இந்த தத்துவங்கள் எல்லாம் சினிமா பாட்டு என உதறி விடலாம்.

‘மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி’ என்ற நம்பிக்கையை வைத்துத்தானே ஈ.பி.டி.பியின் டக்ளஸ் இயங்கினார் என சில சிலர் கேட்க முனைவது தெரிகிறது. சிங்களப் பெரும்பான்மைகள் அவரில் நம்பிக்கை வைத்தாலும், தனி மரமாக தமிழ் மக்களுக்கு அவர் பெற்ற தீர்வு என்ன?

கருத்து வேற்றுமைகளால் கருணா, பிள்ளையான் போன்றவர்கள் முதலில் பிரிந்து, பின்னர் மஹிந்தவை நம்பி விபீணன் போல அவருடன் சேர்ந்ததால் இன்றுவரை மஹிந்தவிற்கான ஒரு பரப்பை பாதுகாக்கிறார்களே ஒழிய, தமிழர்களுக்கான தீர்வு எனப் பெற்றுக் கொடுத்தது என்ன?

தாங்கள்தான் தமிழ் மக்களின் தலைமை, யார் என்ன கூறினாலும் தாங்கள்தான் அதனை வைத்திருக்கிறோம் என தமிழரசு – கூட்டமைப்பு – எண்ணி மற்றையோரைத் துரும்பாக நிலைக்கலாம். ஆனால் துரும்பும் பல் குத்த உதவும் என்பதை நினைத்து தங்கள் தங்கள்



கண்களில் உள்ள மரக்கட்டைகளை ஏசுபிரான் கூறியது போல நீக்கிவிட்டு பார்க்க அவர்கள் முன் வர வேண்டும்.

### அறம் பாடல்

இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக பேசப் போகும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனிக்க வேண்டியவை என சில புலம்பெயர் அமைப்புகள் சமர்ப்பித்த தீர்மானங்களைப் பதிவிட்டு, அவற்றைப் பற்றி “இந்தச் சமர்ப்பணங்களில் கூறப்படுபவையில் பல அத்திபாரங்கள் 1987 இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஒப்பந்தத்தில் இல்லையா, அதனை அமல்படுத்துவதற்கு பொறுப்பு நிற்கவில்லையா?” எனக் கேட்டிருந்தேன்.

அவற்றை ஒட்டி சில வாசக நண்பர்கள் பேச்செடுத்தனர். இவற்றுக்கு முன்னரும் என்னால் மாத்திரமல்ல, அவை பற்றி ஆதரவாகவும் எதிராகவும் நியாயங்கள் வைக்கப்பட்டன. ஒப்பந்தத்தின் ஆக்கங்களின் பின்னணிகள், அவற்றிடையே தமிழ் தரப்புகளுக்கு, பிரபாகரன் மதியுரைஞர் பாலசிங்கத்துக்கு நேரடியாக ராஜீவ் காந்தி. எம்.ஜி.ஆர். போன்றவர்களால் தரப்பட்ட உறுதிமொழிகள், இவை எல்லாவற்றையும் அலட்சியப்படுத்தி, அதன் வாசகங்கள் சிலவற்றில் நுனிப்புல் மேய்ந்து, தமிழ் மக்களது லட்சியத்திற்கான எதுவும் இதில் இல்லை என்று தூக்கி எறிந்து, குதித்தவர்கள் பலபேர். அவர்கள் இன்றும் உள்ளனர்.

முதலில் இந்திய ஒப்பந்தத்தை, அதன் ஆக்கத்தின் பின்னணியில் பார்க்க வேண்டும். இது இரண்டு நாடுகளுக்கு இடையிலான சர்வதேச ஒப்பந்தம். அடுத்து அதன் அமலாக்கத்துக்கு ஏற்படுத் தப்பட்டதான ஸ்ரீலங்கா அரசினால் அவர்களது அரசமைப்புச் சட்டத்தின் மாற்றங்களுக்கான பதின்மூன்றாம் திருத்தச் சட்டமும் மாகாண சபைகளுக்கான இணைச் சட்டமும்.

13ஆம் திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை, ஒற்றை ஆட்சியின் அடிப்படையில் அதிகாரங்கள் யாவும் அதன் அரசமைப்பு பிரகாரம் பெரும்பான்மை கொண்ட மத்திய அரசில், அதன் ஜனாதிபதியின் கைகளில்தான் இருக்கும். மாகாண சபையின் ஆளுநர் மூலம் ஜனாதிபதியே தொடர்ந்தும் அதிகாரங்களைக் கையாளுவார் என்ற பொறிமுறை தமிழ்ப் பரப்புகளுக்கு புரிந்திருந்தது. ஆனால் இணக்கம் என வரும்போது சில சமரசங்களை ஏற்று, விட்டுக் கொடுத்து, அவற்றை ஆதாரமாகக் கொண்டு முன்னேற வேண்டும். அதற்கு இந்தியா உடந்தையாக இருக்கும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளுக்குப் பாதுகாப்பாகக் கிடைத்தது இந்தியப் படைகள் நாட்டிற்குள் வந்ததுதான் என மறைந்த தலைவர் அமிர்தலிங்கம் 1987 இல் மயிலாப்பூரில் கூறிய பேத்தின் சாரத்தைப் பதியும் போது, குறிப்பிட்டு இருந்தேன். அதனை எதிரொலித்ததுதான் பிரபாகரன் சுதுமலைக் கூட்டத்தில் பேசியவை.

மாகாண ஆளுநரின் கையில் ஜனாதிபதியின் முகவராக தரப்பட்ட அதிகாரங்களை மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையிடம் ஒப்படைப்பது என்பதும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்புக்கான அணுகுமுறைகளும் தேவையானவையாக இருந்தன. நண்பர் வித்தியாதரன் குறிப்பிடுவது போல அந்த நாள்களில் கூட கணக்குப் புத்தகங்கள் பேசாது, பல கணக்குப் பிள்ளைகள் இவற்றைப்பற்றி வியாக்கியானம் தரப் புறப்பட்டதன் பலனும், யார் அரியாசனத்தில் அமர்வது என்ற போட்டிகளின் பலனுமே தமிழ் மக்கள் அனுபவித்தவை.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## யாழில் சுதந்திர தின ......

(02ஆம் பக்கம் பார்க்க)

இருக்கிற ஆளுநர் மற்றும் இந்தியத் துணை தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் யாழ் மாநகர சபையின் அதிகாரிகள் மத்திய கலாச்சார அமைச்சுடன் இணைந்ததாக கலாச்சார மத்திய நிலையத்தில் கலாச்சார நிகழ்வுகளை நடத்துவற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு ஒட்டியதாக சுதந்திரதின நிகழ்வினை முக்கியமாக மாகாண மட்டத்திலே இணைப்பான ஒரு விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்வதற்கு ஏற்றவாறாக நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எனவே ஜனாதிபதி கலந்து கொள்ள உள்ளதால் பெரியளவில் அது இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரசு - தமிழர்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று மாலை வந்த சீனாவின் துணைத் தூதுவரையும் குழுவினரையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அறுவர் நேற்று இரவு ஓர் விடுதியில் சந்தித்தனர். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் போரின்போது பாதிக்கப்பட்ட தரப்புடன் அன்றி, பாதிப்பை ஏற்படுத்திய தரப்புடனேயே சீனா நின்றமை வருத்தமளிக்கின்றது என்பது பிரமுகர்கள் தரப்பில் கூறப்பட்டது.

“இறுதிப் போரின்போது சீனா மட்டுமல்ல, இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் இலங்கை அரசிற்கு உதவியமையும் எமக்குத் தெரியும். ஆனால் மற்ற நாடுகள் தற்போதேனும் தங்களை மாற்றிக்கொண்டாலும் சீனா இன்று வரை அதனை மாற்றவோ அல்லது பாதிப்புற்றோர் தரப்பைப் பரிவுடன் அணுகவோ தயார் இல்லை. இதேநேரம் எமக்காக குரல் கொடுக்க முடியாது, நாம் அரசிற்கு அரசு என்கின்ற ரீதியில்தான் செயல்பட முடியும் என சீனா கருதினால், தற்போது இலங்கை அரசிற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையில் ஓர் பேச்சு வார்த்தை ஏற்பாடு இடம்பெறுகின்றது, அந்தப் பேச்சு வார்த்தை வெற்றியளிக்க வேண்டும் என்று ஒரு வாழ்த்து அறிக்கையையாவது சீனாவால் வெளியிட முடியுமா எனக் கேட்டபோதும் சீன அதிகாரிகள் அதற்கும் மறுத்து விட்டனர் என அறிய வந்தது.

## வியட்நாமில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர் களில் 152 பேர் செவ்வாய் இரவு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் நேற்றைய தினம் தத்தமது வீடுகளுக்கு அனுப்பப்படவிருந்தனர் என குடிபெயர்வாளர்களுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த இலங்கையர்கள், நவம்பர் 8 ஆம் திகதி ஜப்பானிய கப்பல் ஒன்றினால் மீட்கப்பட்டு வியட்நாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

மீட்கப்பட்ட 303 இலங்கையர்களில் இரண்டு இலங்கையர்கள் தமது உயிரை மாய்க்க முயற்சித்தனர். அவர்களில் யாழ்ப்பாணம் - சாவகச்சேரியை சேர்ந்த சுந்தரலிங்கம் கிரிதரன் என்பவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் நீண்ட நாள்களின் பின்னர் கடந்த 17ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கு மீதமிருந்த 302 பேரில் 152 பேர் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதற்கு இணக்கம் வெளியிட்டனர். இந்தநிலையில் குறித்த 152 பேரும் விசேட விமானம் ஒன்றின் ஊடாக நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

## செட்டிகுளத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் சந்தேகத்திற்கிடமான இளைஞர் ஒருவரை சோதனை செய்த போது அவரிடம் இருந்து புதையல் தோண்ட பயன்படும் ஸ்கானர் கருவி கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து,அந்தக் கருவி விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டதுடன், அதனை எடுத்துச் சென்ற 35 வயதுடைய இளைஞரும் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றில் முற்படுத்தத் தாம் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவித்தனர்.

## வவுனியாவில் சமத்துவக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரைநீக்கம் செய்து வைத்தார். அலுவலகத்தை கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் நடா வெட்டி திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், விருந்தினர் உரைகள் என்பவற்றுடன் நிகழ்வுகள் நிறைவு பெற்றிருந்தன.

இந் நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் யோகராஜா மற்றும் கட்சியின் நிர்வாக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





## மன்னாரில் ரஜமகா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் நாட்டி வைத்தார்.

வடக்கிற்கு இரு நாள் பயணமாக வருகை தந்துள்ள சீனக் குழுவினர் மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்குகொள்கின்றனர்.

நேற்றைய தினம் மன்னாரில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் 300 குடும்பங்களிற்கான வாழ்வாதார உதவியை வழங்கி வைத்து உரையாற்றினார்.

இதனையடுத்து மன்னார் ஆகாஸ் விடுதியில் மதிய உணவுடன்கூடிய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து மன்னார் மாதோட்டப் பகுதியில் சீனாவின் நிதியில் அமைக்கப்படவிருக்கும் ரஜமகா விகாரைக்கு அத்திவாரம் இடும் நிகழ்வு விகாராதிபதியின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போதும் 150 குடும்பங்களிற்கு உதவிப் பொதி வழங்கப்பட்டது.

மன்னார் நிகழ்வுகளையடுத்து யாழ்ப்பாணத்திற்கு பயணித்த சீனக் குழுவினர் யாழ்ப்பாணம் கோட்டைக்கு பயணித்து கோட்டையை பார்வையிட்டனர்.

இதனையடுத்து இரவு உணவுடன் யாழ் விடுதியில் ஓர் சந்திப்பும் இடம்பெற்றது.

## இந்திய அரசு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைந்து பழுதடைந்த நிலையில் காணப்பட்டன.

இலங்கைக்கு உதவும் நேக்கோடு தமிழக அரசினால் சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. இவை அதிகளவில் வடக்கு மக்களின் பசி போக்கும் திட்டத்தில் கிராம சேகவர் பிரிவு ரீதியில் வழங்கப்பட்டன.

அப்பகுதி அண்மையில் வெள்ள அனர்த்தத்திற்கு முகம் கொடுத்திருந்தது. அப் பகுதி மக்கள் பெரும் கஷ்டத்திற்கு முகம் கொடுத்து வந்தனர். கிராம சேவகரும் கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் இணைந்தே இதனைப் பதுக்கி வைத்தனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பதுக்கி வைக்கப்பட்ட அரிசியை எனத் தெரிவித்த கண்டு பிடித்த நிலையில் அதனை உடனடியாக மக்களுக்கு வழங்கநடவடிக்கைஎடுக்கப்பட்டதாகவும், அதற்காக குடும்ப அட்டைகளுடன் வருமாறு கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தனர் எனவும் மக்கள் குற்றம் சாட்டினர்.

இந்நிலையில் அங்கு வந்த மக்கள் அந்த அரிசி வண்டுகள் நிறைந்து காணப்பட்டமையால் கடும் கோபமடைந்தனர். கிராம சேவகரே அரிசியை வழங்காமல் வைத்திருந்தார் எனவும் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலக கிராம சேவகர்களின் தலைமை அதிகாரியிடம் கேட்ட போது -

இந்த அரிசி மழையின் போது கொண்டு வந்து இறக்கப்பட்டதால் நனைந்த அதனை மக்களுக்கு வழங்க முடியாது காணப்பட்டதால் அதனை மீளளிப்பு செய்து வேறு அரிசி அம் மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த அரிசி கோழிக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. அதற்காக சிலருக்கு வழங்கப்பட்டது, ஏனையவர்களுக்கு வழங்கப்படவிருந்தது இதற்கான அனுமதி அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டு பெறப்பட்டிருந்தது. - எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசனிடம் கேட்டபோது -

இவ்விடயம் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ பிரிவினரை அந்த இடத்திற்கு அனுப்பி அறிக்கையிடுமாறு தெரிவித்துள்ளதாகவும், அந்த அறிக்கை கிடைத்ததும் இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்க முடியும் எனவும் அவர் கூறினார்.











காலைக்கதிர்
Kalaikkathir

# டெங்கு நோயாளர்களும் அதனால் மரணங்களும் யாழில் அதிகரித்துள்ளன என்கிறார் கேதீஸ்வரன்!




யாழ் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அதிக மரணங்களும் பதிவாகின்றன என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

கொவிட்-19 தொற்று காரணமாக, மாகாணங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப் பட்ட போக்குவரத்து காரணமாக கடந்த இரண்டு வருடங்களிலும் டெங்கு நோயாளர்கள் மற்றும் பதிவாகிய மரணங்களின் எண்ணிக்கையும் ஒப்பீட்டளவில் மிக குறைவாகும்.

யாழ். மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 3 ஆயிரத்து 294 நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டதுடன் ஒன்பது மரணங்களும் பதிவாகியுள்ளன.

கடந்த ஒக்ரோபர், நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களிலேயே, பருவப்பெயர்ச்சி மழையின் பின் யாழ் மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் 231 டெங்கு நோயாளர்களும், நவம்பர் மாதத்தில் 306 டெங்கு நோயாளர்களும் மற்றும் டிசெம்பர் மாதத்தில் 570 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஐந்து வருடங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் மரணங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. இந்த வருடம் நடந்த மரணங்களில் பெரும்பாலானவை நோயாளர்கள் தாமதமாக வைத்திய ஆலோசனையை நாடியதாலேயே நிகழ்ந்துள்ளன.

எனவே காய்ச்சல் போன்ற டெங்கு நோய்க்கான அறிகுறிகளுடையவர்கள் உடனடியாக தகுதி வாய்ந்த மருத்துவர் ஒருவரையோ அல்லது வைத்தியசாலைகளையோ நாடி உரிய வைத்திய ஆலோசனையைப் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பருவப்பெயர்ச்சி மழையுடன் ஏற்பட்டுள்ள டெங்கு பெருந்தொற்றைத் தடுப்பதற்கு வாராந்தம் உறுதி செய்யப்படும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும்.

எனவே அனைத்து பிரதேசங்களிலும் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை டெங்கு பரவுவதற்கான அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாகக் கருத்தில் கொண்டு எதுவித காலதாமதமும் இன்றி சமூக பங்களிப்புடன் நுளம்புகள் உருவாகும் மூலங்களை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அனைத்து இடங்களிலும் உள்ள அரச தனியார் நிறுவனங்கள், மத ஸ்தலங்கள், பாடசாலைகள் , உயர் கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் , கட்டடநிர்மாணங்கள் நடைபெறும் இடங்கள்,மீன் பிடி துறைமுகங்கள் மற்றும் வீடுகள் என்பவற்றின் உரிமையாளர்கள், தலைமை அதிகாரிகள் மற்றும் பணிபுரிபவர்கள் தங்கள் நிறுவனங்கள் மற்றும் வீட்டின் உட்பகுதிகளிலும், வெளிச் சுற்றாடலிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் உள்ளனவா என்பதைக் கிரமமாக பரிசோதனை செய்வதுடன் நுளம்புகள் பெருகக்கூடிய ஆபத்துள்ள இடங்களை அடையாளம் கண்டு அவற்றை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# டொலர் மூலம் வருமானமிழைக்கும் நிறுவனங்களே தற்போதைய நெருக்கடியிலிருந்து தப்ப முடியுமாம்!

## மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவிப்பு

டொலர் மூலம் வருமானம் உழைக்கக் கூடிய நிறுவனங்கள் மாத்திரம் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து தப்ப முடியும் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

டொலர் உழைக்கும் நிறுவனங்களால் இறக்குமதி தட்டுப்பாட்டால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை சமாளிக்க முடியும்,உள்நாட்டு பணவீக்கத்தைத் தோற்கடிக்க முடியும் என நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நாணயங்களில் உழைப்பவர்களால் மாத்திரமே தற்போதைய நெருக்கடியிலிருந்து தப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணியை உழைக்கும் தொழில் துறையினர் மாத்திரம் தப்பமுடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியை சாதகமாகப் பயன்படுத்தி அனைத்து வர்த்தகங்களும் தங்களை டொலர்களை உழைப்பவர்களாக மாற்றவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# விமான எதிர்ப்பு துப்பாக்கி தோட்டாக்களுடன் வெலிகம பகுதியில் ஒருவர் கைதாகியுள்ளார்!

வெலிகம தெனிபிட்டிய பிரதேசத்தில் ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கி குண்டுகளுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் தெனியாய முகாமுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நான்கு விமான எதிர்ப்பு தோட்டாக்கள், மூன்று வாள்கள், ஒரு கூரான கத்தி மற்றும் 14,550 மில்லிகிராம் துப்பாக்கி குண்டுகள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெலிகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு கிழக்கு கல்விச் சமூகம் இடம்கொடாது!

## ஹரீஸ் எம்.பி. திட்டவட்டம்

முஸ்லிம்களின் பிரச்சினைகளை பற்றி வெளிப்படையாகப் பேச எமது முஸ்லிம் தலைவர்கள் தயாரில்லை என்பது கவலையான விடயமாக அமைந்துள்ளது. 13 ஐ முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று பேசும் விடயம், கிழக்கையும் வடக்கையும் இணைக்க வேண்டும் என்ற விடயம் பேசுபொருளாக மாறியிருக்கும் தறுவாயில் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகள், சமூகத்தின் எதிர்காலம் சம்பந்தமாக முஸ்லிம் தலைமைகள் உரத்துப்பேசத் தயங்குவதேன் என்ற கேள்வி பரவலாக முன் வைக்கப்பட்டு வருகின்றது என முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

வைத்தியர் எம்.ஜே.கே.எம். அர்சத் காரியப்பரின் தலைமையில் பாடசாலை மாணவர்களுக்கு டார்க் பௌண்டேஷன் அமைப்பால் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் கல்விக்கரம் 2022/23 நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் –

1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசியலிலும், கல்வித்துறையிலும் பின் தங்கிய நிலையில் முஸ்லிம் சமூகம் இருந்த போது கிழக்கை வடக்குடன் இணைத்தன் விளைவு, சொத்தழிவுகள், உயிரழிவுகள், இடம்பெயர்வுகள், வடக்கிலிருந்து முஸ்லிம்கள் துரத்தப்பட்ட துன்பியல் வரலாறுகளை முஸ்லிம் சமூகம் இன்னும் மறக்கவில்லை என்பதால் 2023 ஆம் ஆண்டிலும் நாங்கள் விழிப்பாக இருந்து முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் எடுக்கும் பிரயத்தனங்கள் வெறுமனே வந்த ஒன்றல்ல. கல்வி புரட்சியால் வந்த சிந்தனை அது. கிழக்கில் உருவாக்கப்பட்ட கல்விமான்களால் உருவாக்கப்பட்ட சிந்தனை அது. எங்களை யாரும் இனி மேலும் அடிமைப்படுத்த முடியாது.



எங்களின் அண்டை நாடாக இருக்கட்டும் அல்லது அரசியல் பெரும் முதலை நாடுகளாக இருக்கட்டும் அல்லது அரசியல் பதவிகள் சலுகைகளுக்காக கூனிக் குறுகி நின்றவர்களாக இருக்கட்டும் இவர்களெல்லாம் சேர்ந்து வடக்கு, கிழக்கை இணைத்த சம்பவம் 2023 இல் முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்குப் பங்கம் விளைவிக்க கிழக்கு மக்கள் விட மாட்டார்கள். கிழக்கில் கல்விச்சமூகம் விழிப்பாக இருந்து கொண்டிருக்கிறது. கல்வி, சமூகம் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தி கொண்டது. – என்றார்.

# போதுமானளவு எரிவாயு கையிருப்பில் உள்ளதாம்!

## லிற்ரோ நிறுவனம் அறிவிப்பு

எதிர்வரும் நாள்களில் நுகர்வுக்கு தேவையான சமையல் எரிவாயு போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாகவும் அதன் காரணமாக பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவை இல்லை என்றும் லிற்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

நுகர்வுக்குத் தேவையான அளவு எரிவாயு கையிருப்பில் உள்ளது.கொரோனா தொற்று காரணமாக இரண்டு வருடங்களின் பின்னர் நத்தார் மற்றும் புதுவருட கொண்டாட்டங்கள் காரணமாக எரிவாயுக்கு அதிகளவிலான கேள்வி நிலவுகிறது.

நாட்டுக்கு மாதாந்தம் 24 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயு தேவைப்படுகின்ற போதிலும் இந்த மாதம் 35 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஜனவரி மாதத்துக்குத் தேவையான எரிவாயு அளவை விட மேலதிகமாக 27 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயு கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக நாட்டு மக்கள் அச்சமின்றி எரிவாயு கொள்வனவு செய்ய முடியும். இதனிடையே அடுத்த ஆண்டு முதலாவது எரிவாயு விலை திருத்தத்தின் போது விலை குறைவடையும் என்று உறுதியாக எதிர்பார்க்க முடியாது.

இதேவேளை, டிசெம்பர் மாதத்தில் ஐரோப்பாவில் அதிகளவிலான எரிவாயு நுகரப்படுகின்றமை, ரஷ்யா – உக்ரேன் யுத்தம் மற்றும் பல்வேறு நாடுகளில் காணப்படும் குளிரான காலநிலை காரணமாக எரிவாயு விற்கான விலை அதிகரிக்கப்படும் சாத்தியம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பேராதனைப் பல்கலை மாணவத் தலைவர்கள் இருவரது மாணவர் அந்தஸ்து இடை நிறுத்தம்

பேராதனைப்பல்கலைக்கழக மாணவர் சங்கத்தலைவர் இருவரது மாணவர் அந்தஸ்து இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு இடை நிறுத்தப்பட்டுள்ளவர்கள் தற்போதைய பிரதான மாணவர் சங்கத் தலைவரும், முன்னாள் தலைவரும் ஆவர் என பல்கலைக் கழக பதில் உபவேந்தர் டெரன்ஸ் மௌஜித் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், பூகற்பவியல் பேராசிரியருமான அத்துல சேனாரத்தனவையும் அவரது குடும்ப அங்கத்தவர்களையும் தாக்கி அவர்களது உத்தியோக பூர்வவாசஸ்தலத்துக்குள் சட்ட விரோதமாக உட்புகுந்து கலகம் விளைவித்த சம்பவத்துக்கும், மேற்படி இரு மாணவர்களுக்கும் தொடர்பு உள்ளதாகக் காணப்பட்டமையை அடுத்தே பல்கலைக்கழக நிர்வாகம் மேற்படி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர் சங்க தலைவர் சமோதி சத்சர மற்றும் முன்னாள் மாணவர் சங்க தலைவர் அனுராதா விதானகே ஆகியோரது மாணவர் அந்தஸ்தே இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். அதே நேரம் ஏற்கனவே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள 12 மாணவர்களும் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து ஜனவரி 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.12.2022இல் வெளியிடப்பெற்றது.